விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆனி - 14 திங்கள் 28.06.2021 மலர் - 2, இதழ் - 83

# அதிகரிக்கும் காவலர்களுடனான மோதல்

தமிழகத்தில் சமீப காலமாக, குறிப்பாக ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, காவல்துறையினருக்கும் மக்களுக்குமிடையேயான மோதல்கள் அதிகரித்து வருகின்றன. கொரோனா பொதுமுடக்கக் காலத்திலும்கூட, பல இடங்களில் தி.மு.க நகர துணை செயலர் நீலகண்டன் உட்பட பல தி.மு.கவினர் ஆங்காங்கு காவலர்களை மிரட்டிய சம்பவங்கள் குறித்த செய்திகள் வெளியாகின. இதில் சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படாமல் காவலர்கள் இடம் மாற்றப்பட்டனர் என்பது வேதனையான விஷயம்.

சென்னை சேத்துப்பட்டில் ஒரு பெண் வழக்கறிஞர் காவலர்களுடன் அதீதமான வாக்குவாதம் செய்தார். கொண்டித்தோப்புப் பகுதியிலும் இதே போன்றதொரு சம்பவம் நடைபெற்றது. இரு தினங்களுக்கு முன், உசிலம்பட்டி அருகே நல்ல தேவன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் முத்துமாணிக்கம், ரஞ்சித், காளிதாஸ் உள்ளிட்ட ஆறு பேர் விருவீடு காவல் நிலைய சோதனைச்சாவடியில் காவலர்களுடன் வாக்குவாதம் செய்தனர். தென்னை மட்டையை எடுத்து காவலர்களை தாக்கினர். நெல்லையில் குடிபோதை ஆசாமி ஒருவர் காவலர்கள் மீது சாக்கடையை அள்ளி வீசினார்.

இப்படி, தமிழகத்தில் காவல்துறையினருடன் கட்சியினர், பொதுமக்கள் மோதும் சம்பவங்கள் அதிகரிப்பது என்பது சட்டம் ஒழுங்கை சீர் குலைக்கும், காவல்துறையினர் மீதான நம்பிக்கையை குறைக்கும், குற்றச் சம்பவங்கள் பெருக வழிவகுக்கும். எனவே, தமிழக அரசு உடனடியாக இதில் தலையிட்டு நடவடிக்கை எடுத்து காவல்துறையின் மாண்பை காக்க வேண்டும் என்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பு.

விஜயபாரதம்




# மிசோரமில் பிடிபட்ட ஆயுத குவியல்

மிசோரம் மாநிலத்தில் ஆயுதப் பதுக்கல் குறித்த ரகசியத் தகவல் ராணுவத்தினருக்கு கிடைத்தது. இதனையடுத்து சம்பந்தப்பட்ட பகுதிக்கு விரைந்து சென்ற ராணுவ வீரர்கள் சுற்றி வளைத்து தீவிர சோதனை நடத்தினர். அப்போது சுமார் 1,300 கிலோ வெடி பொருள், 2,000 ஃபியூஸ்கள், 925 மின்னனு டெட்டனேட்டர்கள் மற்றும் 3,000 சிறப்பு டெட்டனேட்டர்கள் கண்டுபிடிக்கபட்டன. இவைகளை பறிமுதல் செய்த ராணுவ வீரர்கள், இந்த பதுக்கலுடன் தொடர்புடைய இருவரை கைது செய்தனர். அவர்கள் மீது தற்போது காவல்துறை அதிகாரிகள் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.



விஜயபாரதம்

# அக்னி பிரைம் ஏவுகணை



விஜயபாரதம்

சமீபத்தில் டி.ஆர்.டி.ஓ மேம்படுத்தப்பட்ட தூரம் அதிகரிக்கப்பட்ட புதிய பினாகா ராக்கெட், ஒடிசா கடலோரப் பகுதியில் உள்ள ஒருங்கிணைந்த ஏவுகணை சோதனை தளத்தில் இருந்து பலகுழல் ராக்கெட் லாஞ்சர் உதவியுடன் வெற்றிகரமாக ஏவி பரிசோதனை செய்யப்பட்டது. 45 கி.மீ வரை சென்று தாக்க கூடிய இந்த ராக்கெட்டுகள், இலக்கை நோக்கி அடுத்தடுத்து வேகமான செலுத்துதல் முறையில் 25 ராக்கெட்டுகள் ஏவப்பட்டு வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது. இந்நிலையில், இந்தியா, விரைவில் அக்னி1 ஏவுகணையின் மேம்படுத்தப்பட்ட ரகமான புதிய அதிநவீன 'அக்னி ப்ரைம்' ஏவுகணையை பரிசோதிக்க உள்ளது. இந்த இரட்டை அடுக்கு ஏவுகணை, அக்னி 1ஐ விடவும் இலகுவாக இருக்கும் என பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது. ஜூன் 28ம் தேதி இந்த ஏவுகணை ஒடிசா மாநிலத்தில் இருந்து சோதனை செய்யப்படலாம் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

# தம்பதியரை பிரித்த காவல்துறை




விஜயபாரதம்

ராஜஸ்தானில் மக்ரானா பகுதியை சேர்ந்த ஒரு முஸ்லிம் பெண்ணும் கிஷன்கர் நகராட்சியில் துப்புரவாளராக பணிபுரியும் ஒருபட்டியலின ஹிந்து இளைஞனும் காதலித்து திருமணம் செய்தனர். தங்கள் காதலை தன் வீட்டில் பிரித்துவிடுவார்கள், தங்களைக் கொன்றுவிடுவார்கள் என பயந்த அந்த பெண், தன் கணவனுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தஞ்சம் அடைந்தார். இதனை கேள்விப்பட்டு அங்கு வந்த பெண்ணின் பெற்றோர், தங்கள் பெண் மைனர் என்றும் அந்த திருமணத்தை தாங்கள் ஒப்புக்கொள்ள மாட்டோம் என்றும் கூறி அந்த பெண்ணை வலுக்கட்டாயமாக பிரித்தனர். இதற்கு அங்கிருந்த காவலர்களும் உடந்தையாக இருந்தனர். மாவட்ட ஆட்சியர் அலுவலக ஊழியர்கள் இதை வேடிக்கை பார்த்தனர். அந்த பெண் மறுத்ததால் வேறு வழியின்றி தம்பதியர் இருவரையும் கைது செய்து கணவனை காவல் நிலையத்திற்கும் அந்த பெண்ணை காப்பகத்திற்கும் அனுப்பி வைத்தனர் காவலர்கள்.

# கொரோனா 2வது அலை முடியவில்லை

நாடு முழுவதும் கொரோனா வைரசின் 2வது அலை பரவல் சற்று தணியத் துவங்கியுள்ளது. நாளொன்றுக்கு 3 லட்சத்தை தாண்டி பதிவான கொரோனா பாதிப்பு, தற்போது 50 ஆயிரம் என்ற அளவில் காணப்படுகிறது. இதனையடுத்து, கொரோனா 2வது அலை பரவல் வேகம் குறைந்துள்ளதால் பல மாநிலங்களில் ஊரடங்கு தளர்வுகள் கொண்டு வரப்பட்டுள்ளன. இதற்கிடையே, கொரோனா 2வது அலை இன்னும் முடிவுக்கு வரவில்லை என்று மத்திய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. நாட்டில் உள்ள 75 மாவட்டங்களில் தொற்று பாதிப்பு எண்ணிக்கை இன்னும் 10 சதவீதத்திற்கு மேல் உள்ளது. எனவே, தொற்றுபரவல் அதிகரிக்கும் வகையிலான தவறுகளை மீண்டும் செய்யக்கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது.

விஜயபாரதம்



# ராணுவ தளபதியை கொல்ல சதித் திட்டம்

பாகிஸ்தான் ராணுவ தளபதி ஜெனரல் கமார் ஜாவேத் பாஜ்வாவை பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் சுற்றுப்பயணத்தின் போது கொல்ல சதித்திட்டம் தீட்டப்பட்டு இருந்தது. அதனை மோப்பம் பிடித்த பாகிஸ்தான் உளவு அமைப்புகள், அந்த திட்டத்தை முறியடித்து திட்டம் தீட்டிய அனைவரையும் கைது செய்ய பாதுகாப்பு படைகளுக்கு உதவியுள்ளன. இதில் சம்பந்தப்பட்ட 4 மேஜர் ஜெனரல், 2 ப்ரிகேடியர், 3 கர்னல்கள், 3 லெஃப்டினன்ட் கர்னல்கள் உள்ளிட்ட மதிப்புமிக்க பதவிகளை வகிக்கும் உயர் அதிகாரிகள் 14 பேர், 22 எஸ்.எஸ்.ஜி சிறப்புப் படை வீரர்கள் மற்றும் 30 இதர ராணுவ வீரர்கள் ஆகியோர் என மொத்தமாக சுமார் 66 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர். இத்தகவலை பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரை சேர்ந்த சமூக ஆர்வலர் டாக்டர் அம்ஜத் அயூப் மிர்சா தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டு உள்ளார்.



விஜயபாரதம்

# மனத்தின் குரலில் தமிழ் மணம்



விஜயபாரதம்

மனத்தின் குரல் நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, 'பஞ்சாப் சீக்கிய குரு கோவிந்த் சிங் தமிழ் குறித்து பெருமையாக கூறியுள்ளார். திருக்குறள் உலகப் புகழ்பெற்றது. உலகிலேயே தமிழ்மொழி சிறந்த மொழி. தமிழ் எனக்கு மிகவும் பிடிக்கும். நான் உலகின் பழமையான தமிழ்மொழி, தமிழ் கலாசாரத்தின் பெரிய அபிமானி, ரசிகன். தமிழ் மீதான என் அன்பு என்றும் குறையாது. பருவமழை காலம் துவங்க உள்ளது. தண்ணீரை சேகரிப்பில் கவனம் செலுத்த வேண்டும். ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் நமது வீரர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும்' என கூறினார். மேலும், 'டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் ஒவ்வொரு வீரரும், தங்களது வாழ்க்கையில் கடுமையான போராட்டங்கள் சந்தித்தவர்கள். நீண்ட காலம் கடுமையாக உழைத்து உள்ளனர். வீரர்கள், அவர்களுக்காக மட்டுமல்ல, நாட்டிற்காக செல்கின்றனர்' என அவர்களுக்கு புகழாரம் சூட்டினார். ம.பி மாநிலத்தில் உள்ள துலேரியா கிராமத்தை சேர்ந்தவர்களுடன் கலந்துரையாடிய மோடி, 'கொரோனா தடுப்பூசியை கண்டுபிடிக்க கடுமையாக உழைத்த நமது விஞ்ஞானிகளை பாராட்டிய பிரதமர், தடுப்பூசி மீதான தயக்கத்தில் இருந்து மக்கள் மீண்டு வர வேண்டும். அனைவரும் தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும்' என வேண்டுகோள் விடுத்தார்.

# நடவடிக்கை வேண்டும்

கேரளாவில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் முலாயஞ்சேரி கிளை செயலாளர் பாபுராஜ் என்பவர், மூன்று மாதங்களுக்கு முன்பு, ஒரு வீட்டில் யாரும் இல்லாதபோது அங்கிருந்த பெண்ணை கொன்றுவிடுவதாக மிரட்டி பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இதனை தன் நண்பனான டி.ஒய்.எஃப்.ஐ அமைப்பை சேர்ந்த லிஜீஷிடம் கூறவே அவரும் அதே போன்று நடந்துள்ளார். பாதிக்கப்பட்ட அந்த பெண் தனது கணவரிடம் இதனை குறித்து கூறியதை அடுத்து, வடகரா காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. தற்போது, அந்த இரண்டு கம்யூனிச கட்சித் தலைவர்களையும் காவல் துறையினர் கைது செய்துள்ளனர்.



விஜயபாரதம்

# ஒன்றிணையும் பட்டியல் இனத் தலைவர்கள்



விஜயபாரதம்

'தமிழகம் முழுவதும் தலித் மக்களுக்கு உள்ள பிரச்னைகள் குறித்து தகவல்கள் சேகரித்து வருகிறோம். இதற்காக, பல தலித் இயக்கத் தலைவர்கள் ஒன்றிணைந்து செயல்பட்டு வருகிறோம். இதில் நாங்கள் விடுதலை சிறுத்தைகள் இயக்கத்தை சேர்க்கவில்லை. காரணம், அவர்களுக்கு தலித் பிரச்னைகளை தீர்ப்பதிலும், தலித் முன்னேற்றத்திலும் ஆர்வமில்லை. தேவேந்திர குல வேளாளர் கோரிக்கை கிட்டத்தட்ட நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. அதேபோல, பறையரை தமிழகத்தின் பல்வேறு இடங்களில், பறையர், சாம்பவர், ஆதிதிராவிடர் என, தனித்தனியாக பெயரிட்டு அழைக்கின்றனர். இந்த மூவரையும் ஆதி திராவிடர் என, ஒரே பெயரிட்டு அழைக்க வேண்டும் என்பது எங்கள் முதல் கோரிக்கை. இரண்டாவது கோரிக்கையாக தமிழகம் முழுதும், 1.5 லட்சம் ஏக்கர் பஞ்சமி நிலங்கள் உள்ளன. அவை தலித்துகளுக்கு உரியவை. அவை தற்போது தலித் அல்லாதோரிடம் இருக்கிறது. அதை மீட்க வேண்டும். பல கிராமங்களிலும், தலித் மக்கள் வசிப்பிடங்கள் சேரி, காலனி, அரிஜன காலனி, பறத் தெரு, பள்ளத்தெரு என, அழைக்கப்படுகிறது. இதுவும் ஒரு தீண்டாமை தான்; அதை ஒழிக்க, அப்பகுதிகளை பொதுப் பெயரிட்டு அழைக்க அரசு உத்தரவிட வேண்டும் என்பது எங்களின் மூன்றாவது கோரிக்கை. இவற்றை வலியுறுத்தி தலித் இயக்கங்கள் போராட்டம் செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது' என தெரிவித்தார் பா.ஜ.க தேசிய செயற்குழு உறுப்பினர் தடா பெரியசாமி.

# திருமாவளவனின் நாடகம்



விஜயபாரதம்

பா.ஜ.க தேசிய செயற்குழு உறுப்பினர் தடா பெரியசாமி தன் அறிக்கையில், 'முதல்வர் ஸ்டாலினை கட்சி நிர்வாகிகளுடன் சந்தித்து, பஞ்சமி நிலங்கள் மீட்பு, அதற்காக தனிக் கமிஷன் அமைத்தல் தொடர்பாக மனு அளித்திருக்கிறார் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன். ஆனால், ஏற்கனவே மூன்று கமிஷங்கள் அமைக்கப்பட்டு, அவற்றின் முடிவுகள் அரசுக்கு கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், தலித் மக்களை ஏமாற்ற திருமாவளவன் நாடகம் போடுகிறார். தி.மு.க.,வின் 'முரசொலி' நாளிதழ் அலுவலகம் இருக்கும் நிலமும் பஞ்சமி நிலம்தான். அதனை தலித்துகளுக்கு திருப்பி அளிக்க ஸ்டாலினிடம் திருமாவளவன் வலியுறுத்துவாரா? ஜெயலலிதா முதல்வராக இருந்த போது, சிறுதாவூர் பங்களா உள்ள நிலம், பஞ்சமி நிலம் என்ற, குற்றச்சாட்டு எழுந்தது. விசாரணைக் கமிஷனும் அதனை உறுதி செய்தது. அப்போது, அ.தி.மு.க கூட்டணியில் இருந்த திருமாவளவன், 'அது பஞ்சமி நில வகையைச் சேர்ந்தது அல்ல' என கூறினார். அரசியலுக்காக திருமாவளவன் கூசாமல் பொய் சொல்வார். திருமாவளவன், சிறுதாவூர் பங்களா மற்றும் முரசொலி அலுவலக இடத்தை மீட்டு மீண்டும் தலித்களுக்கே திருப்பி அளிக்க முயற்சிக்க வேண்டும்' என்று தெரிவித்துள்ளார்.

# வி.ஹெச்.பி. விளக்கம்

உத்தர பிரதேசம் அயோத்தியில் ஸ்ரீராமர் கோயில் கட்டும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இதனை ஸ்ரீராமஜென்ம பூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளை மேற்கொண்டு வருகிறது. சமீபத்தில், அறக்கட்டளையின் பொதுச் செயலர் சம்பத் ராய், 2 கோடி ரூபாய் நிலத்தை 18 கோடிக்கு வாங்கி ஊழல் செய்ததாக காங்கிரஸ், ஆம் ஆத்மி, சமாஜ்வாதி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் புகார் தெரிவித்தன. இக்குற்றச்சாட்டை மறுத்துள்ள சம்பத் ராய், நிலத்தை சந்தை விலையை விட குறைவாகவே வாங்கியதாக விளக்கம் அளித்தார். நிலத்தை விற்றவர்களும் தெளிவான விளக்கங்கள் அளித்தனர். விரைவில் நடைபெற உள்ள உத்தர பிரதேச தேர்தலை முன்னிட்டு இதில் அரசியல் செய்து லாபம் அடைய எதிர்கட்சிகள் முயற்சிக்கின்றன என்பது கண்கூடு. இந்நிலையில், விஷ்வ ஹிந்து பரிஷத் இணை பொதுச் செயலர் சுரேந்திர ஜெயின், 'ஸ்ரீராமர் கோயிலுக்கு நிலம் கையகப்படுத்தியதில் எந்த முறைகேடும் நடக்கவில்லை. அனைத்தும் வெளிப்படையாக, நேர்மையாக நடந்துள்ளது. எதிர்கட்சிகள், ஆதாரமில்லாததால் நீதிமன்றத்தை அணுகவில்லை. எதிர்கட்சிகள் ஆதாரத்துடன் வழக்கு தொடுத்தால், அதை சந்திக்க தயாராக உள்ளோம்' என தெரிவித்துள்ளார்.



விஜயபாரதம்

# ஆளுனர் மாளிகை சிக்கன நடவடிக்கை

புதுச்சேரி துணைநிலை ஆளுநர் அலுவலகத்தில் பணியாற்றி வந்த மேற்பார்வையாளர், செய்தித் தொடர்பாளர், குறைகேட்கும் அதிகாரிகள் அப்பணியில் இருந்து மாற்றப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பதிலாக ஆளுநர் மாளிகை மேற்பார்வையாளராக சந்தர போஸ், செய்தித் தொடர்பு அதிகாரியாக குணசேகரன் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், பல்வேறு சிக்கன நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு நிர்வாகம் சீரமைக்கப்பட்டுள்ளது. மேற்பார்வையாளர்கள் இனி 3,000 ரூபாய்க்கு மேல் செலவு செய்ய ஆளுநரின் தனிச்செயலாளரிடம் ஒப்புதல் பெற வேண்டும். வாடகைக்கு பொருள்கள், ஒப்பந்த அடிப்படையில் பொருள்கள் எடுப்பதாக இருந்தால் அதன் செலவு கணக்குகளை முன்னதாகவே சமர்ப்பித்து ஒப்புதல் பெற வேண்டும். புதிதாக வாங்கும் பொருட்களுக்கு குறைந்த செலவில் ஒப்பீடு அடிப்படையில் முன்அனுமதியுடன் வாங்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், மக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகளை பரிசீலனை செய்ய தனிக்குழு அமைத்து நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.





விஜயபாரதம்

# விமானப்படை தளத்தில் தாக்குதல்

ஜம்முவில் உள்ள இந்திய விமானப் படை தளத்தில், நேற்று அதிகாலை 2 மணியளவில் சக்தி குறைந்த ஒரு குண்டு விமானப்படை அலுவலகத்தின் மேல் தளத்திலும் மற்றொரு குண்டு திறந்தவெளியிலும் வெடித்தது. அதிர்ஷ்டவசமாக பாதிப்போ காயமோ, உயிர்சேதமோ ஏற்படவில்லை. டுரோன் மூலம் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என கூறப்படுகிறது. தேசிய வெடிகுண்டுத் தகவல் மைய நிபுணர்கள், தடயவியல் அதிகாரிகள் அங்கு விசாரணை செய்து வருகின்றனர். பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், விமானப்படை அதிகாரிகளிடம் இச்சம்பவம் தொடர்பாக கேட்டறிந்தார்.

விஜயபாரதம்




# தலைக்கு விலை வைத்தவர் கைது

சுவாமி தரிசன பாரதி ஒரு ஹிந்து ஆர்வலர், உத்தரகண்ட் மாநிலத்தில் ஹிந்துக்களுக்காக நீண்ட காலமாக குரல் கொடுத்து வருபவர். கோயில் நிலங்களை காக்க பிரச்சாரம் செய்பவர். அவர், முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்பை பரப்பி வருவதாகவும், அவரின் தலையை கொண்டு வருபவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் அளிக்கப்படும் எனவும் சர்ச்சைக்குரிய வீடியோவை வெளியிட்டார் உத்தரபிரதேசத்தை சேர்ந்த ஒரு முஸ்லிம் தலைவரான மௌலானா ராசா. இவர், ஹபீஸ் பைசான் ராசா பரேலியில் உள்ள ஒரு உள்ளூர் மதரசாவின் தலைவராகவும் 'சர்வ சமாஜ் சங்கதன்' என்ற அமைப்பின் தலைவராகவும் உள்ளார். அரசியல் ரீதியாக தீவிரமாக செயல்பட்டு வரும் அவர், உத்தரபிரதேசத்தில் பல்வேறு எதிர்க்கட்சி தலைவர்களுடன் நெருக்கமாக உள்ளவர். தற்போது ராசாவை உ.பி காவல்துறையினர் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

விஜயபாரதம்



# வலையில் சிக்கிய மீம்கள் . . .









## சர்ச்சைக்குறிய அரசின் ட்வீட்

பேச்சு சுதந்திரம், எழுத்து சுதந்திரம் என்ற பெயரில், பாரத அரசிற்கு எதிராக எப்போதும் பேசியும் எழுதியும் வருபவர் சர்ச்சைக்குரிய எழுத்தாளர் அருந்ததி ராய். அவர் எழுதிய 'காட் ஆப் ஸ்மால் திங்க்ஸ்' என்ற புத்தகம், பாரத அரசின் குடிமக்கள் ஈடுபாடு (citizen engagement platform of the Government of India) என்ற மத்திய அரசின் டுவிட்டரில் விளம்பரம் செய்யப்பட்டது. அந்த புத்தகத்தை குறித்து 20 சொற்களின் புத்தக சுருக்கத்தை கூறும் சவால் விடுக்கப்பட்டது. மேலும், அந்த டுவீட்டில் எட்மண்ட் வில்சன் எழுதிய "ஒரே புத்தகத்தை இரண்டு நபர்களும் இதுவரை படிக்கவில்லை". என்ற ஒரு மேற்கோளும் பதிவிடப்பட்டது. இதற்கு பல நெட்டிசன்களும் கடுமையாக கண்டனம் தெரிவித்தனர். அதனையடுத்து உடனடியாக அந்த ட்வீட் நீக்கப்பட்டது.




விஜயபாரதம்